கதையாசிரியர் இளங்கவின் தன்னலம், ஆணவம், பேராசை என்பன போன்ற பண்பற்ற மகளிர் தம் வாழ்வு நிலையைக் கூறியிருப்பது சில கதைகளில் உண்டு. எனினும் இங்கு நற்பண்புகளை உணர்த்தும் பெண்மை – பெண்ணியச் சிந்தனைகளே உள் நோக்கப்பட்டன.

**சான்றெண் விளக்கம்**


1. இருபதில் சிறுகதைகள் (1900-1073) ப.1. மேற்கோள், இன்னாசி சூ. டானியேல் அ., சிறுகதைச் செல்வம், பக்கம் 5.
2. தொல்காப்பியம், பொருளதிகாரம், செய்யுளியல், 171.
3. பாலசுப்பிரமணியன், சி., தமிழ் இலக்கிய வரலாறு, ப.338.
4. வரதராசன், மு., இலக்கிய மரபு , ப. 165.
5. இராமலிங்கம், மா., விடுதலைக்குமுன் புதிய தமிழ்ச் சிறுகதைகள், ப.30.
6. ஏசுதாசன், ப.ச., டேவிட் பிரபாகர் ப., (பதிப்பாசிரியர்கள்), செம்மொழித்தமிழ் வளர்ச்சியில் கிறித்துவம், தொகுதி-2, பக்கங்கள் 682-683.
7. கலைக் களஞ்சியம், ப. 751.
8. இன்னாசி, சூ., டானியேல் அ., சிறுகதைச் செல்வம், பக்கம் 9.


•◆•



## 10. "தேவாலயத்தில் அன்பியமும், பெண்களும்"


சகோ. முனைவர்
தி. நிர்மலா
முதல்வர்,
ஜெயராஜ் அன்னபாக்கியம் மகளிர்
தன்னாட்சிக் கல்லூரி, பெரியகுளம்.

சகோ. முனைவர்
அல்போன்சாள்
தமிழ்த்துறை உதவிப்பேராசிரியை
ஜெயராஜ் அன்னபாக்கியம் மகளிர்
தன்னாட்சிக் கல்லூரி, பெரியகுளம்.


**முன்னுரை**

இறைமனிதன் சந்திப்பின் நிலைக்களனே ஆலயம்! இவ்வாலயம் மிகப்பெரிய அன்பின் சின்னம். இங்கு ஆண்களை விட பெண்களே அதிகமாக அன்பியம் எனும் தேவாலய அமைப்பில் நின்று பணி செய்கின்றனர். காலங்காலமாக கட்டிக் காத்து வந்த பெருமைகளை நிலைநாட்டி, உலகிற்கு ஒளியாக வாழ்ந்து வருகின்றனர்.

பெண்ணின் சாதனை எத்தனை, எத்தனை என்பதையும், குறிப்பாக தேவாலயத்தில் பெண்களின் பங்கு என்ன? என்பதையும் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம். ஒவ்வொரு பங்கும் ஓர் தேவாலயத்தைக் கொண்டுள்ளது. பங்குத்தளம் என்பது பரந்து விரிந்த ஒன்று. இங்கு எல்லோரும் எல்லோரையும் புரிதல், அன்பு செய்தல், பகிர்தல், இறைவார்த்தையின்படி வாழ்தல், உதவுதல் என்பது கடினம். எனவே, இது அன்பியங்களாக சிறு சிறு உறவு சமூகங்களாக பிரிக்கப்பட்டுள்ளன. இதனைத் திருச்சபை, குடும்பங்கள், அன்பியங்கள், கூடி செபித்தல், பல்வேறு குழுக்கள், சமூகப்பணிகள் என நோக்குவோம்.

**1. திருச்சபை**

**உறவின் துவக்கம்:**

மூவொரு இறைவனின் வாழ்வில் பங்குபெறும் ஓர் உறவுச் சமூகம்- இயேசுக் கிறிஸ்துவோடு ஆவியில் தந்தையோடு உறவு கொண்டுள்ள ஒரு சமூகம். ஆயர், குருக்கள், துறவியர், பொதுநிலையினர் இவர்கள் மற்றும் திருமுழுக்கு சகோதர உறவில் இணைக்கிறது. இவ்வுறவு இறையன்பையும், பிறரன்பையும் மையமாகக் கொண்டது. இச்சமூகம், மனிதன் இறைவனோடும் மனிதன் தன்னுடன் வாழும் சக மனிதர்களோடும் கொள்ளும் உறவு இவற்றின் அடையாளமாகவும், கருவியாகவும் விளங்குகிறது. கிறிஸ்துவை மையமாகக் கொண்ட ஒரு விசுவாச சமூகம், தலைவர் இதற்கு இயேசுவே.

"அடித்தள அமைப்புகளின் அதிகாரங்களில் பொதுநிலையினரின் பங்கேற்பை அதிகரிக்க, திருச்சபையின் நிர்வாக முடிவுகள், வழிபாடு

மற்றும் முக்கிய நிகழ்வகளில் பொதுநிலையினரின் பங்கேற்பு கட்டாயம் இருக்க வேண்டும். பொதுநிலையினர்தான் திருச்சபை, பொதுநிலையினர் தங்களுக்குரிய இடத்தை திருச்சபையில் பெறவும், திருச்சபையின் பணிகளிலும், முடிவு மேற்கொள்வதிலும் பொதுநிலையினரின் பங்கேற்பு உயரவும், அவர்களைத் தகுந்த முறையில் உருவாக்கவும் ஏற்ற தளமான அன்பியங்கள்" என்பது இன்று நாம் கண்கூடாகக் காண்பது எனலாம்.

**அன்பிய பிறப்பு:**

"கத்தோலிக்கத் திருச்சபையின் வரலாற்றில் இரண்டாம் வத்திக்கான் சங்கம் ஒரு முக்கியமான திருப்புமுனை அல்லது மைல் கல் எனலாம். நிறுவனமாகிப் போன திருச்சபையை, பொதுநிலையினரின் பங்கேற்பு மிகுந்த திருச்சபையாக்கியது இது. ஆன்மீக வாழ்வு, லௌகீக வாழ்வு என்று மனித வாழ்வைக் கூறு போடாமல் ஆன்மீகம், வழிபாடு, பொருளாதாரம், சமூகம், அரசியல், குடும்பம், கல்வி, கலை, கலாச்சாரம் என்று மனித வாழ்வின் அத்தனை அம்சங்களையும் உள்ளடக்கிய" முழு மனிதக் கண்ணோட்டத்தை வழங்கியது எனில் மிகையல்ல. **மனித வாழ்வின் அனைத்து அம்சங்களையும் அனைவரும் பெறக்கூடிய நீதி நிறைந்த நிலைதான் இறையாட்சி.** இந்த இறையாட்சியை மலர வைப்பதைத் தனது இலட்சியமாகக் கொண்ட அமைப்பு தான் தலத் திருச்சபை. இந்த தலத் திருச்சபையின் இலட்சியமான, இறையாட்சியை மலரச் செய்யும் மகத்தான கருவி **'அன்பியம்'** என்று இது கூறுகிறது.

எனவே, அன்பியங்கள் திருச்சபையில் இரண்டாம் வத்திக்கான் சங்கத்திற்குப்பின் புத்துணர்வோடு பிறந்தன. 20-ஆம் நூற்றாண்டு திருச்சபை வரலாற்றில், திருச்சபை வரலாற்றைத் திருப்பிப் பார்க்க, திரும்பிப் பார்க்க அழைத்த ஒரு புதிய புனித புண்ணிய சகாப்தம் எனில் மிகையல்ல. இறைவனும், மனிதனும் கைகோர்த்து வாழ்ந்த ஏதேன் தோட்டம் காணக் கிடைத்த காலமிது. மனிதம் சிறக்க, மனிதம் பேணப்பட, ஆண்டான் அடிமை நிலை, ஆண், பெண்ணெனும் பேதங்கள் களைந்தெறியப்பட வேண்டிய வரலாற்று மறுமலர்ச்சிக் காலமிது.

**2. குடும்பம்**

**முக்கியத்தன்மை:**

இன்றைய சமூக அமைப்பில் குடும்பங்களைப் பார்த்தோமென்றால் கணவன், மனைவி, குழந்தை போன்ற உறவு நிலைகள் சின்னாபின்னமாகக் கிடக்கும்போது அக்கறை உள்ள ஒரு தனிமனிதன் அக்குடும்பத்தை ஆற்றுப்படுத்தி கணவன், மனைவி, மக்கள் என ஒன்றுகூடச் செய்வது என்பது ஓர் சமூக அக்கறையுடைய செயலாகும்.



மூவொரு இறைவனின் முக்கடல் சங்கமத்தில், உலக விரிவினையே உலா வரும், ஆறறிவு உயிர்களின் பாச வலைக்குள் பார் போற்ற பகிர்ந்து வாழ்வதே பாங்கான குடும்பம்.

**கிறித்துவக் குடும்பங்கள்:**

ஒரு குடும்பம் அல்லது ஒரு இல்லத்திருச்சபை முதியோர் முதல் குழந்தைகள் வரை பாதுகாப்பான அமைப்பைக் கொண்டது. இது சமூகத்தின் உயிர்நாடியாக ஒரு காலத்தில் கூட்டுக்குடும்பமாக இருந்து, அன்பியச் சாயல்களுடன் துவங்கியது. ஆனால், இன்று சுயநலம், பேராசை, நுகர்வுக் கலாச்சாரம், சுகபோகம் போன்ற உலகக் காரணிகளால் சின்னாபின்னமாக்கபட்டுச் சிதைந்து முதியவர்களும், குழந்தைகளும் குறிப்பாகப் பெண் குழந்தைகள் மிகப்பெரிய சுமைகளாகக் கருதப்படுகின்றனர். எனவே, முதியோர் இல்லங்கள், குழந்தைகள் காப்பகங்கள், அரசு தொட்டில்கள் பெருகி விட்டன. கூட்டுக் குடும்பம் உடைந்ததால் குடும்பத்தில் குழந்தை பராமரிப்பு, வளர்ப்பு, வழிகாட்டுதல் போதுமான அளவில் இல்லை. எனவே, இளைய தலைமுறையினர் சமூகத்தொடர்புச் சாதனங்கள் புகட்டும் சீரழிவுக் கலாச்சாரத்தை உள்வாங்கி மடிகின்றனர். கருத்தடை, கருச்சிதைவு இவைகளால் உயிர்களுக்குப் பாதுகாப்பான குடும்ப அமைப்பே கொலைக்களமாக மாறுகின்றது. பாதுகாப்பின்மையால் கணவன், மனைவியரிடையே சந்தேகம் வருகின்றது. எனவே, திருமணப் பிரமாணிக்கம் உடைகின்றது. இறுதியில் விவாகரத்து. இவ்வாறு இன்று குடும்பங்கள் சிதைவதைத் தடுக்க வேண்டும். அது இழந்து விட்ட பண்புகளைப் புகட்டி, மீண்டும் கட்டமைக்க வேண்டும் என்பதன் அடிப்படையிலே 'அன்பியம்' என்ற அடித்தள சமூகம் உருவானது. இந்தக் குடும்பத்தில் 'கணவன், மனைவி உறவில் மிக முக்கியமானது – கற்பு'. கணவன், மனைவியைச் சார்ந்தும், மனைவி கணவனைச் சார்ந்தும் இருப்பது. இதுவே குடும்பம் என்ற நிறுவனத்தைப் பாதுகாக்கும். எனவே குடும்பங்கள் கோயில்களாக, குடும்பங்களில் அன்பும், அமைதியும், மகிழ்ச்சியும் நிலவ ஆண், பெண் சமத்துவம் பேண வேண்டும்.

இல்லத் திருச்சபையே அன்பியம். துவக்ககால கிறித்தவர் வாழ்க்கையே மீண்டும் வாழ எழுப்பப்பட்ட ஓர் விழிப்புணர்வு இயக்கமே **'அன்பியம்'** எனலாம்.

**பங்கு**

இறைமக்கள் சமூகத்தில் எல்லா பிரிவினரும் சிறு குழுக்களில் ஒன்றாய்க் கூடி தலத்திருச்சபையின் எல்லாத் திட்டங்களையும், தீர்மானங்களையும் எடுத்துத் தலத்திருச்பையின் பலவிதப் பணிகளை நிறைவேற்றுகின்ற விசுவாசிகளின் சமூகமே **'பங்கு'** ஆகும்.

இந்த பங்கு எனும் தலத்திருச்சபையில் "எல்லாரும் சம அந்தஸ்தைப் பெற்றவர்கள் என்பதை வலியுறுத்த எழுந்துள்ள திருச்சபையின் புதிய வடிவமே அன்பியம். நம்மை நாமே நிர்வகித்து, நம்மை நாமே நிறைவாழ்வை நோக்கிய நடையில் அழைத்துச் செல்லும் புதிய வழியே அன்பியம்".

**அன்பிய நோக்கமும் இலட்சியமும்:**

அடித்தள திருச்சபை சமூகங்கள் ஆண்டவர் இயேசு நமக்கு காட்டிச் சென்ற அன்பைக் கடைபிடித்து அன்பின் சமூகங்களாய் வாழ வேண்டுமென்ற நோக்குடன் சூட்டப்பட்ட பெயரே அன்பியம்.

1. ஒரு குறுகிய எண்ணிக்கை கொண்ட விசுவாசிகள், தோழமை உணர்வோடு
2. வழக்கமாக
3. பொது நிலையினரின் தலைமையில் ஒன்றுகூடி
4. இறைவார்த்தையை வாசித்து, தங்கள் விசுவாசத்தை வளர்த்து, குழுவாகச் செபித்து, இறைஅனுபவம் பெற்று,
5. தங்கள் வாழ்க்கைப் பிரச்சினைகளையும், வாய்ப்புகளையும் விசுவாச ஒளியில் ஆய்வு செய்து
6. அப்பிரச்சினைகளையும் வாய்ப்புகளையும் விசுவாசத்தோடு எதிர்கொள்ள செயல்திட்டங்கள் தீட்டி
7. அவற்றை குழுவாக இணைந்து தோழமையில் நிறைவேற்றுதல்.

**- ஆயர். பிரான்சிஸ்கோ க்ளாவர், சே.ச.**

இவ்வாறு அன்பியம் என்பதற்கான விளக்கம் சொல்கிறார்.

அன்பியம் தனித்தன்மையோடு சிறப்பாக செயல்பட பின்வரும் நான்கு கூறுகளும் அவசியம்.

1. அருகாமையில் உள்ளவர்கள் அன்பிய உறுப்பினர்களாய் இருக்க வேண்டும்.
2. நற்செய்திப் பகிர்வு இடம் பெறவேண்டும்.
3. தலத்திருச்சபையோடு உறவு இருக்க வேண்டும்.
4. செயல்பாடு உள்ளதாக இருக்க வேண்டும்.

பங்கேற்பு என்பதே நோக்கம். திருச்சபையையும், சமுதாயத்தையும் இரு கண்ணெனக் கொண்டு பங்கேற்றல்.

பெரிய கூட்டத்தில் பங்கேற்பு சிலருக்கே வாய்க்கிறது. சிறிய கூட்டத்தில் பலரது பங்கேற்பு உறுதி செய்யப்பட்டு வருகிறது எனக் கேள்விப்படுகிறோம்.



வசதி, செல்வாக்குப் படைத்தவர்கள் பங்கேற்பு நியாயமானது. அடிமட்ட மக்களின் பங்கேற்பை உறுதி செய்வது, உறவுகளை பலப்படுத்துவது, தன்னோடு, பிறரோடு, சமுதாயத்தோடு, இயற்கையோடு, இறைவனோடு அன்பு, நீதி, சமத்துவம், சகோதரத்துவம் இவற்றால் ஒருங்கிணைப்பது, ஒரே தந்தை, ஒரே குடும்பத்தின் பிள்ளைகள் என சமத்துவம், சகோதரத்துவம் போன்ற கொள்கைகளை உருவாக்குவதே அன்பியங்களின் நோக்கமாகும்.

**இலட்சியம்:**

"அன்பியத்தின் இலட்சியம் திருச்சபையின் இலட்சியமாகிய இறையாட்சியே. அன்பியம் திருச்சபையல் புதிய வடிவமாக இருக்கக் கூடிய காரணத்தால், அன்பியத்தின் இலட்சியமும், திருச்சபையின் இலட்சியமும் ஒன்றுதான். இறைமகன் இயேசுவின், இறையாட்சி மதிப்பீடுகளான அன்பு, நீதி, சமத்துவம், சகோதரத்துவம் போன்ற கொள்கைகளை உள்ளடக்கியது இந்த இலட்சியம்".

இதனையே இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடு "அனைத்துலக திருச்சபை, தந்தை, மகன், தூய ஆவி ஆகியோரிடையே உள்ள ஒற்றுமையோடு ஒன்றிணைந்த ஒரு மக்கள் குலம் போல் திகழ்கிறது" என்பதற்கிணங்க ஒன்றிணைய வேண்டும். இதில் செப வாழ்வு ஒரு தூண் என்றால் சமூக ஈடுபாட்டு வாழ்வு இன்னொரு தூண்.

மூவொரு இறைவனிடையே விளங்கிய ஒற்றுமை, அன்பு பரிமாற்றம், ஒன்றித்துத் திட்டமிடல், சிந்தித்தல், சமத்துவம் என்ற அனைத்திலும் ஒன்றி அன்பியமாய் இருப்பது போல், எல்லோரும் ஒன்றாய் இருக்க ஜெபிக்கிறார்கள். இதுவே செபத்திற்கு அடிப்படை. அன்பியங்களில் பெண்களின் பங்கேற்பு அதிகமாக உள்ளது.

"ஞான நல்லறம் வீர சுதந்திரம்
பேணு நற்குடிப் பெண்ணின் குணங்களாம்" – பா. 1868

என்று பெண்கள் சமுதாயம் வளர்கிறதெனலாம். ஐம்பது பெண்கள் ஒரு குழுவில் இருப்பாரெனில் விரல்விட்டு எண்ணும் அளவிற்கே ஆண்கள் பங்கேற்கின்றனர்.

ஐம்பது பெண்கள் ஒரு குழுவில் இருப்பார்களெனில், விரல்விட்டு எண்ணும் அளவிற்கே ஆண்கள் உள்ளனர்.

கூடிச் **செபித்தல்:**

பெண் நினைத்தால் எதையும் சாதிக்க முடியும். ஒரு பெண் சுயமாகவே எல்லா மக்களையும் ஒன்று கூடச் செய்து வீடுகளிலோ, தெருக்களில் பொது இடங்களிலோ செபிக்க வைப்பது தன் ஆன்மீகத் தேடலோடு பிறரையும் தேட வைக்கும் ஆன்மீகச் செயல்பாடாகும்.

தூய தந்தையே! நாம் ஒன்றாய் இருப்பது போல் அவர்களும் நன்றாய் இருக்கும்படி நீர் எனக்கு அளித்த உம் பெயரின் ஆற்றலால் அவர்களைக் காத்தருளும் என்று இயேசு மன்றாடினார். (யோவான்: 17:11)

மக்கள் அனைவரும் ஒன்றிணைந்த ஒரு குடும்பமாக வாழவேண்டும் என்று இறைவன் விரும்புகின்றார்.

தொடக்க திருச்சபை செபிக்கும் திருச்சபையாய் இருந்தது. வேதத்தை ஆராய்ந்து பார்ப்பதற்கென்று இருந்த குழுக்களிலே கிரேக்கநாட்டுப் பெண்களும் இருந்தனர். லீதியா எனும் கிரேக்கப் பெண் தான் சமயம் மாறியதோடு, தன் வணிகத் தொழிலுக்கு மத்தியிலும் இறையடியார்களை தன் வீட்டிற்கு வரவேற்று விருந்தோம்பி இறையியல் தொடர்பான கருத்துகளைப் பரிமாறிக் கொள்ளவும் செய்தாள்.

மரியாவின் வீடு செப வீடாக விளங்கியது. பேதுருவின் விடுதலைக்காய் திருச்சபை மரியாவின் வீட்டில் மன்றாடிக் கொண்டிருந்தது. நள்ளிரவிலும் மக்கள் மன்றாடிக் கொண்டிருந்தனர். கிரேக்கப் பெண் ரோதே வீட்டில் வேலைக்காரி என்றாலும் அவளும் பிறரோடு செபத்தில் ஈடுபட்டிருந்தார். **(கிறி. சமுதாய நல்லிணக்கம் ப. 65)**

"கடவுள் ஒளியாய் இருக்கிறார். அவரிடம் இருள் என்பதே இல்லை. அவர் ஒளியில் இருப்பது போல், நாம் ஒளியில் நடப்போமானால் ஒருவரோடு ஒருவர் நட்புறவு கொண்டிருப்போம்". **(1 யோ 1:5-7)**

"அவர்கள்....இறை வேண்டலில் உறுதியாய் நிலைத்திருந்தார்கள்". **(தி. ப. 2 : 42)**

செபிக்கும் அந்த செபத்தின் வழியாக, அதன் பலனாக சாதி, மத, பேதமில்லா சமூகமாக மலர செபம் உதவுகின்றது. வழிகாட்டுகின்றது மற்றும் பண்படுத்துகின்றது. இதிலிருந்தே எல்லா நற்பண்புகளும் மனித நேயமும் இறைநேயத்திலிருந்து பிறக்கிறது எனில் வியப்பல்ல.

சமத்துவம், சமதர்ம சமுதாயம் படைப்பதே இலட்சியம் ஆகும். இதன் அடிப்படையில் பெண்களின் விழிப்புணர்வையும் செயல்பாடுகளையும் அன்பியம் வலுப்படுத்துகின்றது.

"மூவாயிரமாவது ஆண்டுகளில் தமிழகத் திருச்சபையின் மகிழ்ச்சியூட்டக்கூடிய காரியமாக நடைபெற்று வருவது அன்பியங்கள் எனப்படும் அடித்தளத் திருச்சபைச் சமூகங்களின் தோற்றம்". **(அன்பிய வாழ்வே கிறித்துவ வாழ்வு ப. 95)** என்று கூறுகிறது.

**அன்பிய சமூகத்தில் குழுக்களும் அதன் பணிகளும்:**

அடித்தள திருச்பை சமூகம் என்பது பங்கைவிட சிறியதாகவும், குடும்பதை விட பெரியதாகவும் உள்ள ஓர் அமைப்பு. ஒரு அன்பியத்தில்



5 முதல் 20 குடும்பங்களும் 20 முதல் 150 உறுப்பினர்களும் இருக்கலாம். கூட்டம் வாரம் அல்லது 15 நாள்களுக்கு ஒருமுறை கூட்டப்படுகிறது.

திருச்சபையின் அனைத்து மூலக்கூறுகளையும் தன்னகத்தே உண்மையிலேயே பார்க்கக் கூடிய விதத்தில் உள்ளடக்கியுள்ள அடித்தளத் திருச்சபை சமூகங்களை 'திருச்சபை' என்று அழைப்பது முற்றிலும் பொருந்தும்.

"அன்பியம் திருச்சபையின் ஒரு பகுதி அல்ல; முழுத்திருச்சபையையும் உள்ளடக்கியுள்ள வடிவ அமைப்பாகும்". **(அன்பிய வாழ்வில் கிறிஸ்தவ வாழ்வு பக். 91).**

இதில் பெண்களே பங்கேற்கின்றனர். ஆண்கள் வெகு சொற்ப எண்ணிக்கையில் பங்கேற்கின்றனர். பொதுநிலையினரே பங்கேற்க வேண்டும். குருக்கள், கன்னியர் வழிகாட்டுதல் மட்டுமே செய்ய வேண்டும். பல குழுக்கள் அமைக்கப்பட்டு அவர்கள் இறை வார்த்தையை விளக்கியும் உணவருந்தியும் ஒருவருக்கொருவர் உதவி செய்தும் வாழ்கின்றனர். அனைத்து குழுக்களிலும் பணிகள் சிறக்க பல்வேறு குழுக்கள் பின்வருமாறு:

**1. கூட்டம் ஏற்பாடு செய்யும் குழு:**

கூட்டத்திற்கு ஏற்பாடு செய்வதையும், உறுப்பினர்களுக்குத் தகவல் தெரிவிப்பதையும். பெண்களே அதிகம் இப்பணிகளைச் செய்கின்றனர்.

**பங்குப் பேரவை:**

அன்பியங்களிலிருந்து பங்குப்பேரவை என்ற பெரிய அமைப்பிற்கு தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இதனைப் **'பங்கு மேய்ப்புப் பணிப் பேரவை'** என்பர். பெண்கள் திருச்சபையில் தலைமையேற்கும் ஓர் சிறந்த அமைப்பே இது. இதில் பொதுவாக அந்தந்த அன்பியங்களிலிலுமுள்ள தலைவர், செயலர், பொருளர் மற்றும் பல்வேறு குழுக்களின் தலைவர்கள் கலந்து கொள்வார்கள். பங்கு எனும் தலத்திருச்சபையின் மொத்தப் பங்கேற்பும், செயல்பாடுகளும் இவர்களால் உறுதிப்படுத்தப்படுகிறது எனலாம்.

இதன் பணி பங்குத்தந்தையருடன் ஒத்துழைத்து ஒருங்கிணைந்த பங்குமக்களை கிறித்தவ வாழ்வு, அனைத்துத் துறைகளிலும் செழித்தோங்கத் திட்டமிட்டு செயல்படுத்துதல்.

**பல்வேறுக் குழுக்கள்**

**1. திருவழிபாட்டுக் குழு** - இதில் இரு பிரிவினர் உளர்:

**அ.பாடகர் குழு:**

வழிபாட்டிற்குத் தேவையான அனைத்துப் பாடல்கள் விவிலிய இறைவார்த்தைகள் அனைத்தையும் மக்கள் பங்கேற்கத் தயாரித்தல் மற்றும் பகிர்ந்து கொடுத்து, பயற்சி அளித்தல்.

**ஆ. அலங்காரக் குழு:**

திருப்பலி பீடம் அலங்கரித்தல், கோயிலை சுத்தம் செய்தல், பூ அலங்காரம் செய்தல், தேவையான பொருட்கள் வாங்கி வருதல் என்பன போன்ற பணிகள் மற்றும் அன்பியங்களில் நடைபெறும் குழுத் திருப்பலிக்குத் தயாரித்தல், தேவையான பொருட்களை முன்னேற்பாடு செய்து, தயாரித்து வைத்திருத்தல்.

**2. கலைக் குழு:**

அன்பியக் கூட்டங்களை ஆர்வமுள்ளதாக மாற்ற ஆக்கப்பூர்வமான கலைவடிவங்களை தயரித்து முக்கிய நாட்களை சிறப்பித்தல். சினிமா, தொலைக்காட்சி பற்றி ஆக்கப்பூர்வமாக விமர்சித்தல். மக்களுடைய சொந்த மண்ணின் கலாச்சாரப் பண்புகளை வளர்த்தல், கலைகளை வளர்த்தல்.

**3. கல்விக் குழு:**

அனைவரின் கற்றலையும் உறுதிப்படுத்துதல். பின்தங்கிய மாணவியருக்கு இலவசமாகக் கற்றுத்தருதல், கல்வி அறிவற்றவருக்கு முறைசாராக் கல்வி வழி வாசிக்க, எழுத கற்பித்தல்.

**4. நலவாழ்வுக் குழு:**

சுத்தம், சுகாதாரம், ஒழுக்கம் ஓம்பும் வழிமுறைகளைக் கற்றுத் தந்து வருமுன்காக்க விழிப்புணர்வளித்தல்.

**5. சமூகப்பணிக் குழு:**

வறியவர், முதியவர், ஊனமுற்றோர், நோயாளிகளுக்கு அரசிடமிருந்து சலுகைகள் பெற்றுத் தருதல். விதவைகள், வீடற்றோர், அனாதைகள், திருப்பயணம் செல்வோர், போதைப் பொருட்களுக்கு அடிமையானோர் இவர்களுக்கு வழிகாட்டுதல், துணை நிற்றல். பொருாதாரம் வளர்க்க சுய உதவி குழுக்கள் அமைத்து சிறுதொழில்கள், சுயதொழில்கள், சிறுசேமிப்பு, கால்நடை பராமரிப்பு என பல்வேறு முன்னேற்றங்களுக்கு வழிகாட்டுதல்.

**6. போராட்டக் குழு:**

அடிப்படையான உரிமைகளையும், நியாயமான, தேவைகளையும் அரசிடமிருந்தும் திருச்சபையிடமிருந்தும் பெறுவதற்குப் போராடுதல். போராடுபவர்களுடன் திரளாகக் கலந்து கொள்ளுதல்.

**7. சமாதானக் குழு:** மு. நா. ப. 26

குடும்பங்களுக்கிடையே சண்டை சச்சரவுகள் ஏற்படும்போதும், கருத்து வேறுபாடுகளின்போதும் சமாதானம் ஏற்படுத்துதல்.



**8. தொடர்புக் குழு:**

பங்குப் பணியாளர், பிற அன்பியங்கள், பிற அமைப்புகள், இயக்கங்களுடன் அன்பியம் சார்ந்த உறவுக்கும், ஒத்துழைப்பிற்கும் உடனிருத்தல்.

**9. பெண்களின் பணிக்குழு:**

பங்குக் குடும்பத்தில் வரும் பிரச்சனைகளுக்கு ஆலோசனை மற்றும் கலந்தாய்வுக் கூட்டம் நடத்துதல். துறவியர் இல்லாத பங்குகளில் இறையியல் பயிற்சி பெற்று நற்கருணை வழங்குதல்.

**10. இளையோர் பணிக்குழு:**

இளம்பெண்களை நல்வழியில் ஆன்மீகம், உடல், உலகம், சமூகக் காரியங்களில் நல்லக் கருத்துக்களில் உருவாக்குதல், வழிகாட்டுதல்.

**11. நற்செய்திப்பணிக் குழு:**

நற்செய்தியைக் கிளைப் பங்குகளுக்கு எடுத்துச் செல்லுதல். மறைக்கல்வி வகுப்புக்களை பங்குகளில் நடத்துதல்.

**12. பல்சமய உரையாடல் குழு:**

கருத்துப் பரிமாற்றம் செய்தல், இணைந்து கூட்டங்கள் நடத்துதல், பிரச்சனைகள் ஊர்களில் ஏற்படின் சமாதானத்துக்கு ஆவன செய்தல் என பல்வேறு செயல்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

**சிறப்பும், வளர்ச்சியும்:**

1. திருப்பலி தேவாலயங்களில் மட்டுமல்லாது அன்பியங்களில் நிறைவேற்றுவது நெருக்கமான இறையுறவை ஏற்படுத்துகிறது.
2. பெண்களின் தலைமைத்துவம் வளர்கிறது.
3. பெண்களின் பங்கேற்பு பெரும்பான்மையாக உள்ளது.
4. பெண்கள் சமய, சமூக, அரசில் விழிப்புணர்வும் பெற்று பங்கேற்பும் செய்கின்றனர்.
5. பிற சமயத்தினரும் தெருக்களில், வீடுகளில் நடைபெறும் அன்பியங்களில் பங்கேற்பது சிறப்பானது.
6. பொருளாதார முன்னேற்றம், சுயம் வளர்கிறது, துணிச்சல், சமூக நலன்கள் பேணப்படுகிறது. வழிகாட்டுதல், நல்வாழ்வு.
7. சகமனிதர்களுடன் பகிர்வும், அக்கறையும் வளர்கிறது.
8. ஆன்மீகத்துடன் அதன் பரிணாமமாக இறைவார்த்தையை அதிகமாக வாசித்து வாழ்வில் வரும் இன்ப, துன்பங்களை இயேசு கிறஸ்துவின்

வாழ்க்கையான பிறப்பு, பாடுகள், மரணம், உயிர்ப்பு என்பவற்றில் பங்கேற்கும் மனிநிலையில் ஏற்றுக் கொள்ளுதல். பிறரையும் ஏற்றல்.

9. ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற எண்ணம் அன்பியத்தால் வளர்கிறது.

**அன்பியம் பற்றி:**

"இன்றைய கத்தோலிக்கத் திருச்சபையில் இறை மக்களாகிய பொதுநிலையினரின் நலன்கள் மீது அக்கறையுள்ள அமைப்புகளில் ஒரு சிறந்த அமைப்பு அன்பியமாகும். பல குடும்பங்கள் ஒன்றுகூடி உறவாட, கருத்துக்கள் பரிமாற நற்பணிகளாற்ற அன்பியங்கள் உதவுகின்றன. எங்கள் பங்கிலுள்ள அன்பியங்களில் ஓர் அன்பியத்தில் 20 முதல் 30 வரை குடும்பங்கள் உள்ளன. இந்த அன்பியக் குடும்பங்களில் நடைபெறும் இன்ப – துன்பங்களில் அனைவரும் பங்கெடுக்கின்றோம். திருமணம், பிறந்த நாள், துக்க காரிய நாட்கள் போன்றவற்றில் தவறாமல் கூடிய மட்டும் கலந்து கொள்கிறோம்.

வறுமையில் வாடும் குடும்பங்களின் பிள்ளைகளுக்கு கல்வியும், வேலைாய்ப்பும் கிடைக்க ஏற்பாடு செய்கின்றோம். கூட்டங்கள் எல்லா அன்பியக் குடும்பங்களிலும் வரிசைப்படியும், அழைப்புக்கு ஏற்பவும் நடைபெறுகின்றது. அன்பியங்களில் விவிலியம் வாசிப்பும், நற்செய்திப்பணியும் கிறிஸ்தவ மற்றும் சமூக வாழ்வுப் பிரச்சனைகளை அடிப்படையில் அலசப்படுகின்றன என்று திரு. டோனி கூறுகிறார்."

**முடிவுரை:**

பெண்கள் பணியை அன்பியங்கள் நோக்கில் பார்க்கையில் பங்கேற்புப் பணிகளை இரண்டு விதத்தில் நோக்கினோம். ஒன்று, திருச்சபைக்குள் பணிபுரிவது. இன்னொன்று, திருச்சபைக்கு வெளியே பணி செய்வது. ஒன்று இன்னொன்றுக்கு வழிகாட்டுவதாக உள்ளன. கூடிச் செபித்து, நற்கருணையைப் பகிர்ந்து, இறைவார்த்தையை வாழ்வாக்க, உடமைகளையும் பொதுவாகக் கொண்டு அனைவருக்கும் பகிர்ந்தளித்து, சாதி, மத, இன பால் பேதங்களைத் தாண்டி அனைவரும் ஒருங்கிணைந்து நீதி, அன்பில் மலர்ந்த சமத்துவ சமுதாயம் உருவாக்குவதே அன்பியங்கள். அன்பியங்களின் உயிர்நாடியாக பெரும்பான்மையாகப் பங்கேற்று, பணியாற்றும் பெண்களின் பங்கேற்பு பன்முகப் பார்வையில் அழகாக மிளிர்கிறது என்பது மிகையல்ல.

ஆயினும், பெண்கள் திருச்சபையில் பெரும் அங்கம் வகித்துப் பணிகள் அனைத்திலும் பெரும்பான்மை பங்களிப்பைச் செய்தாலும் பெண்கள் குருத்துவம் மறுக்கப்பட்டே வருகிறது. பெண் துறவிகள் குருக்களாக வாய்ப்பளித்தல் சமத்துவத்திற்கு மேலும் வழி கோலும் என்பதில் ஐயமில்லை எனலாம்.



**குறிப்புகள்**

அன்பிய வாழ்வே கிறித்தவ வாழ்வு – ப.125
அன்பிய வாழ்வே கிறித்தவ வாழ்வு – ப.125
அன்பியங்களின் வழி நிறை வாழ்வு – பக். 54-55
வேணாட்டு வேர்கள் - ப.66
கிறித்தவத்தில் சமுதாய நல்லிணக்கம் - ப.65
வேர்கள் - ப.66
கிறித்தவத்தில் சமுதாய நல்லிணக்கம் - ப.65
அன்பிய வாழ்வே கிறித்துவ வாழ்வு ப. 95
அன்பிய வாழ்வில் கிறிஸ்தவ வாழ்வு ப.91
அன்பிய வாழ்வில் கிறித்தவ வாழ்வு – ப.128

**துணை நூல்கள்:**


வேணாட்டு வேர்களிலிருந்து. - அருள்பணி. R.பால் ரிச்சர்டு ஜோசப்
அன்பிய வாழ்வே கிறிஸ்தவ வாழ்வு. - பணி. அ. அருள்ராஜ்
பன்முக நோக்கில் பெண்ணியப் பதிவுகள். - முனைவர் சி.வாசுகி மற்றும் முனைவர். சி. அயோத்தி
நிர்வாகம் ... இயேசு நல்ல நிர்வாகி - அருட்திரு. அ. அல்போன்ஸ்
கிறித்தவத்தில் சமுதாய நல்லிணக்கம். - கிறித்தவ ஆய்வு மையம்
அன்பியங்கள் வழி நிறை வாழ்வு. - அருள்பணி. S.மரிய ஜோசப்